# 2.4 இயேசுவின் ஒளிக்குச் சான்று பகர்வோம்



யோவான் நற்செய்தி இயேசுவை 'உலகின் ஒளி' என சான்று பகர்கின்றது. இந்நூலை பன்னிருவரில் ஒருவரான திருத்தூதுவர் யோவான் எழுதினார் என்னும் நம்பிக்கை உள்ளது. அதேவேளை குரு சக்கரியாவின் மகனான வேறொரு யோவான் என்பவர் கடவுளின் ஏற்பாட்டின்படி இயேசுவை 'ஒளி' என சான்று பகர்ந்து அவருக்கான பாதையை ஆயத்தப்படுத்தினார். யோர்தான் நதியில் அநேக மக்களுக்கு இவர் திருமுழுக்கு கொடுத்தபடியால் திருமுழுக்குநர் யோவான் என அழைத்தனர். இயேசுவின் இவ்வுலகப் பணிக்குச் சான்று பகர்வதே இவரின் அழைப்பாகும்.

> கடவுள் அனுப்பிய ஒருவர் இருந்தார்;
> அவர் பெயர் யோவான்
> அவர் சான்று பகருமாறு வந்தார்.
> அனைவரும் தம் வழியாக நம்புமாறு
> அவர் ஒளியைக் குறித்துச் சான்று பகர்ந்தார். (யோவான் 1:6-7)
>
> 'அவர் (திருமுழுக்கு யோவான்) அந்த ஒளியல்ல;
> மாறாக ஒளியைக் குறித்துச் சான்று பகர வந்தவர்'
>
> (யோவான் 1:6-8)

திருமுழுக்கு யோவானின் தூய வாழ்க்கை முறையையும் அர்ப்பணிப்பையும் அவதானித்த மக்கள், வரப்போகும் மேசியா இவர்தானா என்று எண்ணி வந்தனர். சிலர் இதனை திருமுழுக்கு யோவானிடம் நேரடியாகவும் கேட்டனர். எனினும் யோவான் தெளிவாக, தாம் ஒளியாவனவருக்குச் சான்று பகர்வதற்கு மட்டுமே வந்ததாகக் கூறினார்.

## சான்று பகர்வோரின் குணாதிசயங்கள் யோவான் 1:19-31

### 1. தம்மைத் தாழ்த்தி ஆண்டவரின் புகழ் ஏற்றுதல்

உம்மை பற்றி என்ன சொல்கிறீர் என்று யோவானிடம் கேட்ட போது, நான் மெசியா அல்ல ஆண்டவருக்கு வழியைச் செம்மைப்படுத்துங்கள் என பாலைநிலத்தில் ஒலிக்கின்ற ஒரு குரல் மட்டுமே என்றார்.



இலவச விநியோகத்திற்காக

இவ்வாறு ஆண்டவருக்கு வழியை ஆயத்துப்படுத்துபவராக மட்டும் திருமுழுக்கு யோவான் தம்மை அறிமுகப்படுத்திக் கொண்டார். அவர் தன்னைத் தேடி வந்த புகழையும் பெயரையும் மறுத்துரைத்து ஆண்டவரை மட்டும் உயர்த்தினார். தனது ஒன்றுவிட்ட இளைய சகோதரரான இயேசுவின் பாதணியின் வாரைக்கூட அவிழ்ப்பதற்கு தான் அருகதையற்றவர் என்றார்.

'இவையாவற்றிலும் அவருக்குச் செல்வாக்குப் பெருகவேண்டும்; தனது செல்வாக்கு குறைய வேண்டும்' என்று கூறி திருமுழுக்கு யோவான் சான்று பகர்வதற்கான அழைப்பை உரிய முறையில் நிறைவேற்றினார்.

## 2. மக்களின் பாவம் போக்கும் இறைமகனாக ஆண்டவரை அறிமுகப்படுத்தல் (யோவான் 1:29-34)

இயேசு தம்மிடம் வருவதைக் கண்ட திருமுழுக்கு யோவான்

இதோ கடவுளின் ஆட்டுக்குட்டி!
ஆட்டுக்குட்டியாம் இவரே உலகத்தின்
பாவத்தைப் போக்குபவர். (யோவான் 1:29)

இஸ்ரயேல் மக்களுக்கு இவரை வெளிப்படுத்தும்
பொருட்டே நான் வந்துள்ளேன். (யோவான் 1:31)

இவரே இறைமகன் எனச் சான்றும் கூறிவருகிறேன்
(யோவான் 1:34)
இதோ கடவுளின் ஆட்டுக்குட்டி (யோவான் 1:36)



## 3. யாவரையும் இயேசுவின் சீடராக்கும் பணியில் சுயநலமற்றுச் செயல்படுதல்

**யோவான் தனக்குரியவற்றை இயேசுவுக்காக்கினார்**

திருமுழுக்கு யோவான் தமது சீடனாகிய அந்திரேயாவுக்கு இயேசுவை அறிமுகப்படுத்தினார். அந்திரேயா சென்று தன் சகோதரனாகிய சீமோன் பேதுருவை அழைத்து வந்தார். பின்னர் இவர்கள் இருவரும் இயேசுவின் முக்கிய சீடராகினர். 1:35-42

## 4. கடவுளின் முழுமையான மீட்பின் செய்தியை விளக்கி அதனைப் பின்பற்ற தூண்டுதல்

ஆண்டவருக்காக வழியை ஆயத்தமாக்குங்கள்;
மனிதர் அனைவரும் கடவுள் அருளும் மீட்பைக் காண்பர் லூக்கா 3 : 6-14


என்று அன்பின் வார்த்தைகளைக் கூறினார். அதேவேளையில் மக்களின் பாவ வாழ்க்கையையும் வன்மையாகக் கண்டித்தார். அவர்களில் நிறைந்திருந்த அருவருப்பான செயல்களின் கோரத்தை எடுத்துக் காட்டுவதற்கென அம்மக்களை விரியன் பாம்புக் குட்டிகளே! என்று அழைக்கத் தயங்கவில்லை.


இலவச விநியோகத்திற்காக

திருமுழுக்கு யோவானின் செய்தியைக் கேட்ட மக்கள் இருதயத்தில் குத்தப்பட்டவர்களாய், நாங்கள் என்ன செய்ய வேண்டுமெனக் கேட்டனர். அதற்கு இயேசு அளித்த பதில் லூக்கா நற்செய்தியில் (3:11-14) காணப்படுகின்றது. வாசித்து கீழே எழுதுங்கள்.

(1) ..........................................................................................................
(2) ..........................................................................................................
(3) ..........................................................................................................
(4) ..........................................................................................................

### சக்கேயு சான்று பகர்கின்றார்



லூக்கா நற்செய்தி 19:1-10 இல் கூறப்பட்டுள்ள சகேயுபற்றிய கதையை நாம் சிறுவயதிலிருந்து அறிந்திருக்கிறோம்.

சக்கேயு இயேசுவின் அன்பினால் மனந்திரும்பிய செல்வந்தர். அவர் வரிதண்டு-வோருக்குத் தலைவராயிருந்தவர். அவர் ஒரு பாவி எனக் கூறி மக்கள் அவரை ஒதுக்கியிருந்தனர். மனந்திரும்பிய பின் சக்கேயு தன் உடமைகளில் பாதியை ஏழைகளுக்குக் கொடுக்க முன்வந்தார். யாரிடமாவது பிழையாகப் பணம் பெற்றிருந்தால் நான்கு மடங்காகத் திருப்பிக் கொடுக்கவும் தீர்மானித்தார். இயேசுவின் ஒளியைப் பெற்றவரின் புதிய வாழ்வை இது வெளிப்படுத்துகின்றது. சொல்லினால் மட்டுமல்ல; செயலினாலும் தம் புதுவாழ்வைப் பற்றிச் சான்று பகர்ந்து வந்தார். அவர் இயேசுவின் ஒளியைப் பெற்ற மகனாகச் செயற்பட்டார்.

### சமாரியப் பெண் சான்று பகர்கின்றார்.

**யோவான் நற்செய்தி 4:1-42**
ஆண்டவர் இயேசு சமாரியாவின் சிக்கார் என்னும் ஊரில் பலவிதங்களிலும் தாழ்நிலையினர் என்று மக்களால் ஒதுக்கப்பட்டிருந்த பெண் ஒருவரை இயேசு சந்திக்கின்றார்.

அவர் ஒதுக்கப்பட்டிருந்தமைக்கான காரணங்கள்

1) கலப்பினத்தவரான சமாரியர்
2) ஒழுக்கமற்றவர் என்று கருதப்பட்டமை
3) ஒரு பெண்


இலவச விநியோகத்திற்காக

அச்சந்திப்பில் இயேசுவின் அன்பை உணர்ந்த அப்பெண் 'அவர் மெசியாவாக இருப்பாரோ' என்று எண்ணி தன் ஊர் மக்களிடம் போய் சான்று பகர்ந்தார். இதனால் பலரும் இயேசுவில் நம்பிக்கை கொண்டனர்.

இவ்வாறு ஒதுக்கப்பட்ட ஒருபெண் இயேசுவின் உள்ளொளியைப் பெற்றதினால் தைரியமாகச் சான்று பகர்ந்தார். அவரைச் சந்திக்க கிராம மக்கள் திரண்டு வந்திருந்தனர். அவ்வாறாயின் நாம் எவ்வளவு இலகுவாக நமது நடத்தைகள் மூலம் அவருக்குச் சான்று பகர வாய்ப்புக்கள் இருக்கிறதென்று சிந்தியுங்கள். இதனைக் குறித்து ஆசிரியருடன் கலந்துரையாடுங்கள்.

### வாசித்து மகிழுங்கள்

#### ஜோன் நியுட்டன் என்பவரின் சான்று

'அது கடும் இருள் சூழ்ந்த ஒரு இரவு. ஆழ்கடலில் அடிமை வியாபாரக் கப்பலொன்றில் தொழில்புரியும்போது கடும் புயல் வீசியது. மரண இருளோடு கப்பல் மூழ்கிவிடுமோ என்ற பயத்துடன் போராடிக் கொண்டிருந்தவேளை அது. ஆண்டவரின் ஒளியைப் புறக்கணித்து நடத்திக் கொண்டிருந்த பாவத்தின் அடிமை வாழ்வைப் பற்றிச் சிந்திக்க எனது இந்நிலை ஒரு வாய்ப்பைத் தந்தது. எனது வலுவற்ற நிலையைத் திடீரென உணரக்கூடியதாக இருந்தது. 'கிறிஸ்துவைப் பிரதிபலித்தல்' என்னும் நூல் மேலும் என் கண்களைத் திறந்தது. ஆண்டவர் என்னை மீட்டெடுத்தார். அத்தோடு வாழ்வின் இருளில் இருந்தும் என்னை முற்றாக விடுவித்தார். என்னைப் புதியதொரு மனிதனாக்கினார்.

இந்த இடைவிடாது தொடரும் ஆண்டவரின் அன்புக்குச் சான்று பகர்வதற்கு என்னுள் ஒரு உத்வேகம் ஏற்பட்டது. உடனே ஆண்டவரைத் துதித்து தேவ கிருபையின் அனுபவத்தை கீதத்தின் மூலமாக எடுத்துரைக்க முற்பட்டேன். மேலும் பல கீதங்கள் எழுதினேன். நீங்கள் இன்று பாடும் 'Amazing Grace' என்ற பாடல் மேற்கூறிய என் சொந்த அனுபவத்தை விளக்கும் ஒரு கீதமாகும்.

இரண்டு நூற்றாண்டுகளுக்குப் பின், 1972ம் ஆண்டில் இப்பாடல் உலகெங்கும் மிகப் பிரபல்யமாயிற்று. இதிலுள்ள கடவுளின் கிருபை பற்றிய உருக்கமான வார்த்தைகள் பல உள்ளங்களைத் தொட்டன. ஆரம்பத்தில் கப்பலில் சுற்றித் திரிந்த ஊதாரி வாழ்வினை மேற்கொண்டிருந்தவனின் வாயில் வந்தவையோ தகாத வார்த்தைகளாக இருந்தன. ஆனால் ஆண்டவரின் ஒளியைப் பெற்ற பின்னர், இவர் இயற்றிய கீதங்களின் வார்த்தைகள் இறைவன் அன்பையும் இரக்கத்தையும் வர்ணிப்பவையாயின. இறுதியில் இவர் குருத்துவப் பணியாற்றினார்.

**செயல்பாடு**

1. *ஒளிக்குச் சான்று பகர்ந்த வேறு திருவிவிலிய கதாபாத்திரங்கள் சிலரின் பெயரைக் கூறவும்.*
2. *சக்கேயுவின் வாழ்கைச் சரித்திரத்திற்கும் லேவியராகமம் 6:1-5 இற்கும் இடையிலான தொடர்புகளைக் குறிப்பிடவும்.*
3. *எஸ்ரா 4:15 நெகேமியா 4:1-2, ஆகிய பகுதிகளை வாசித்து சமாரியர், யூதர் பற்றி விபரங்கள் எழுதுக.*

   *இது தொடர்பாக யூதர், சமாரியர் பற்றிய தகவல் கோவை ஒன்றை பின்னிணைப்பாக இணைக்கவும்.*